<u>2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>O.S.No. 46/2015</u>

19.01.2026. பி.வா.சா. 1 திரு. ராஜதுரை

(1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது).

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் சாட்சியம் அளிக்க கோட்டாட்சியர் எனக்கு 09.06.2025 தேதியில் உத்தரவு அளித்தார். மேற்படி தேதியில் இருந்து தற்போது தேதி வரை சாட்சியம் அளிக்க சம்மந்தப்பட்ட கோப்பினை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த பிராதினை நான் படித்து பார்த்துள்ளேன். பிராதில் கூறப்பட்டுள்ள விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் ஓரளவுக்கு தெரியும். பொதுவாக அரசாங்கத்திற்கு ஒருவர் நிலத்தினை தானமாக அளித்தால் அதன் அசல் ஆவணம் எங்கள் அலுவலகத்தில் இருக்கும் என்றால் பூமி தான போர்டில் தலைமை அலுவலகத்தில் இருக்கும். எங்களிடம் நகல் இருக்கும். தான பத்திரத்தின் நகல் தற்போது வரை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அசல் வழக்கு எண் 119/2011 வழக்கில் அசல் தாக்கல் செய்துள்ளோம். அசல் ஆவணம் எங்களிடம் இல்லாததால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எங்களது தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. எங்கள் தலைமை அலுவலகத்தில் இருந்து அசல் ஆவணத்தை பெற்று தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தாக்கல் செய்யலாம்.

2. அசல் வழக்கு எண் 119/2011 ல் நான் அசல் தான பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. மேற்படி வழக்கில் யார் சாட்சியம் அளித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் பிராது தபசில் சொத்தினை பார்வையிடவில்லை. பிராது தபசில் சொத்துக்கள் குலவணிகர்புரம் கிராமத்தில் தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். அழகிய மணவாளன் பிள்ளை என்று நாங்கள் கூறும் நபர் கீழவீரராகவபுரம் கிராமத்தில் வசித்து வந்தார்

என்பதாக எங்கள் ஆவணத்தில் துலங்குகிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 முதல் 7 வரையிலான ஆவணங்கள் படி குலவணிகர்புரம் கிராமத்தில் தான் தமுக்கு அடித்தார்கள் என்றால் சரிதான். எனது ஆவணப்படி குலவணிகர்புரம் கிராமம் மற்றும் கீழவீரராகவபுரம் கிராமம் வேறு வேறு கிராமங்கள் என்றால் சரிதான் ஆனால் அருகருகே உள்ளது. அழகிய மணவாளன் பிள்ளையின் பட்டா எண் 1026 தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்யவில்லை முன்பு தாக்கல் செய்தார்களா என்று தெரியவில்லை. மேற்படி பட்டா எனது கோப்பில் இருக்கும் என்றால் சரிதான் மேற்படி பட்டாவை தாக்கல் செய்யலாம்.

3. பி.வா.சா.ஆ.7 ஆவணமானது சொரிமுத்து தேவர் என்பவர் அழகிய மணவாளன் பிள்ளைக்கு எழுதிக்கொடுத்ததாக கூறும் கிரைய ஆவணத்தின் அசல் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் தமிழ்மொழிபெயர்ப்பில் இத்துடன் மூல ஆதரவுகள் 4 ஐயும் கொடுத்துள்ளேன் என்று கூறப்பட்டுள்ளது சரிதான். அதன் மூல ஆவணங்கள் தலைமை அலுவலகத்தில் இருக்கும். நான் சாட்சியம் அளிப்பதற்கு 6 மாத காலத்தில் இதன் அசல் ஆவணங்களும் கோப்புகளும் தலைமை அலுவலகத்தில் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பொதுவாக யார் கிரையம் வாங்குகிறார்களோ அவர்களிடம் அசல் முன் ஆவணம் இருக்கும் என்றால் வேறு சொத்துக்கள் எதுவும் அந்த ஆவணத்தில் கூறப்படவில்லை என்றால் அசல் முன் ஆவணம் கிரையம் பெறுபவர்களிடம் கொடுப்பார்கள்.

4. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் கீழவீரராகவபுரத்தில் தமுக்கு அடிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சொரிமுத்து என்பவர் எனது ஆவணப்படி கீழவீரராகவபுர கிராமத்தில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். ஒரு சொத்தை தானமாக கொடுப்பதாக இருந்தால் அரசாங்க அரசிதழில் வெளியிடுவதற்கு முன்பு சொத்து தானம் செய்வது பற்றி முறையாக என்னென்ன சட்ட நடவடிக்கைகள் பின்பற்றினோம்

என்ற விபரம் இருக்கும் என்றால் தலைமை அலுவலக கோப்பை பார்வையிட்டால் தெரியும். தலைமை அலுவலக கோப்புகள் அனைத்தும் வரவழைத்து பார்வையிட்டால் மேற்படி விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். கிராமம், பள்ளிக்கூடம், சாவடி ஆகிய 3 இடங்களிலும் நோட்டீஸ் போர்டில் தெரியபடுத்திவிட்டோம் என்ற விபரம் எங்களது அலுவலக கோப்பில் உள்ளது என்றால் அலுவலக கோப்பை பார்வையிட்டால் தெரியும்.

5. 1960 காலகட்டத்தில் வி.ஏ.ஓ என்ற பதவி வருவதற்கு முன்பு கர்ணம் என்ற பதவி இருந்தது என்றால் சரிதான். மேற்படி கர்ணம் பதவியானது வி.ஏ.ஓ பதவியை விட உயர்ந்தது என்றால் சரியல்ல இரண்டும் சமமான பதவி ஆகும். எனது தரப்பு வழக்கின் படி பிராது தபசில் சொத்தின் முதல் உரிமையாளர் சொரிமுத்து என்றாலும், அதன் பின் அவரிடம் இருந்து அழகிய மணவாளன் பிள்ளை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். சொரிமுத்து பெயரில் உள்ள பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.5 அரசிதழ் கடைசி பக்கத்தில் அழகிய மணவாளன் பிள்ளை தானம் கொடுப்பதற்கு முன்பாக 15 வருடங்களாக அவருக்கு மனநிலை சரியில்லை என்று எனது விசாரணையில் புலப்படுகிறது என்று அப்போதைய கர்ணம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு மனநிலை சரியில்லாத நபர் சட்ட ரீதியாக எந்த ஆவணமும் பிறப்பிக்க முடியாது என்றால் சரிதான். மேற்படி அதே ஆவணத்தில் தானம் கொடுத்தவர் ஸ்தலத்தை விட்டு காணாமல் போய் 1 மாதம் ஆகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அழகிய மணவாளன் பிள்ளை எந்த தேதியிலும், அரசாங்கத்திற்கு எந்த தான பத்திரமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் அந்த காலக்கட்டத்தில் மனநிலை சரியில்லாமல் இருந்ததால் அவர் எந்த தான பத்திரமும் அரசாங்கத்திற்கு எழுதிக் கொடுத்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் அசல் ஆவணங்களை பார்வையிட்டால் துலங்கும். நகல் ஆவணத்தில் கையால் எழுதப்பட்டுள்ளதால் அசல் ஆவணத்தில் மேற்படி கையால் எழுதப்பட்ட விபரம் உள்ளதா என்று தெரியாது.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையானது தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)